//மின்னஞ்சல் மூலமாக//

முதன்மை தலைமைப் பொறியாளர் (ம) தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணைகள்.

முன்னிலை : பொறி. சா. மன்மதன், பி. இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர் (ம)
தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து.,

செயல்முறை ஆணை எண்.எஸ்.5(3)/20524/2025–3/ நாள்:01–04–2025

குரோதி, பங்குனி 18
திருவள்ளுவர் ஆண்டு 2056

பொருள் : பணியமைப்பு – த.நா.பொ.சா.ப. தொகுதி – 2024 – 2025 – ஆம் ஆண்டிற்கான வரைதொழில் அலுவலர் தேர்ந்த பெயர் பட்டியலிலிருந்து – **முதுநிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வு ஆணை வழங்குதல்** – குறித்து.

பார்வை : இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.எஸ்.5(3)/ 20524/ 2025–2/ நாள்:26–03–2025.

********

பார்வையில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில் ஒப்பளிக்கப்பட்ட 2024 – 2025 – ஆம் ஆண்டிற்கான தேர்ந்த பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் காணும் வரைதொழில் அலுவலர்கள் தமிழ்நாடு திருத்திய ஊதிய விதி 2017–இன்படி நிலை–20 ரூ.37700 – ரூ.138500/– என்ற ஊதிய நிலையில் **முதுநிலை வரைதொழில் அலுவலராக** தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 47 (அ) (1) – இன் கீழ் தற்காலிகமாக பதவி உயர்வு பெற தெரிவு செய்யப்பட்டு ஒப்பளிக்கப்பட்டு அவரவர் பெயருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்படுகிறது.

2. சம்மந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் இவர்களுக்கு முறையான தற்காலிக பதவி உயர்வு ஆணை மற்றும் பணியமர்வு ஆணைகளை பத்து நாட்களுக்குள் பிறப்பிக்க வேண்டும்.

3. இப்பணியமர்வு ஆணையில் திருத்தம் கேட்டு வரும் எவ்வித விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. மறுபணியமர்வாணைகள் கிடைக்கப் பெற்ற அன்றைய தினமே இந்த வரைதொழில் அலுவலர்களை சம்மந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் பதிலாள் எதிர்நோக்காமல் பதவி உயர்வில் பணியில் சேர ஏதுவாக விடுவிக்க வேண்டும்.

4. முதுநிலை வரைதொழில் அலுவலராக பதவி உயர்வில் செல்ல விருப்பம் இல்லாதவர்கள் தங்கள் பதவி உயர்வின் மீதான உரிமையை நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ நடைமுறையில் உள்ள விதிகளின்படி துறக்க வேண்டும். தற்காலிகமாக பதவி உயர்வு மீதான உரிமையை துறக்கும் பட்சத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு குறையாமல் பதவி உயர்வினை துறக்க வேண்டும்.

அவ்வாறு பதவி உயர்வின் மீதான உரிமையினைத் துறக்க விரும்பும் வரைதொழில் அலுவலர்களிடம் உரிய படிவத்தில் விண்ணப்பம் பெற்று சம்மந்தப்பட்ட தலைமைப் .பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்கள் பதவி உயர்வு பணித் துறப்பை எந்த தேதி முதல் ஏற்கப்படுகிறது என குறிப்பிட்டு ஆணை பிறப்பித்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு உரிய செயல்முறை ஆணையின் பதிப்பு நகலுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டும்.

5. தற்காலிக பதவி துறப்பு செய்தவர் மீண்டும் தங்கள் பெயர்களைபரிசீலிக்க விதிகளின்படி மூன்றாண்டுகள் காத்திருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

<u>பதவி உயர்வுக்கான உரிமையை துறந்து விடுவதற்கான விண்ணப்பம்</u>

...................................................................................... அலுவலகத்தில் வரைதொழில் அலுவலராக பணிபுரியும் நான் இப்பதவி உயர்வின் மீதான உரிமையை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்–2016 பிரிவு 57–இன்படி தற்காலிகமாக மூன்று ஆண்டுகளுக்கு அல்லது நிரந்தரமாக விட்டுவிட இதன் மூலம் விருப்பம் தெரிவிக்கிறேன்.

ஒப்பம் :

பெயர் :

பதவி :

நாள் :

6. இப்பதவி உயர்வு ஆணை சம்மந்தப்பட்ட வரைதொழில் அலுவலர்கள் மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும், தலைமைப் பொறியாளர்கள் / கண்காணிப்புப் பொறியாளர்களால், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை அவர்களின் கவனத்திற்கு இதுவரையில் கொண்டு வரப்படவில்லை என்பதால், அத்தகைய ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற நிபந்தனையின் பேரில் முதுநிலை வரைதொழில் அலுவலராக பதவி உயர்வு வழங்கப்படுகிறது. முறையான பதவி உயர்வு ஆணைகள் வழங்கப்படும் முன்னர் அரசாணை எண்.367, பணியாள் மற்றும் நிர்வாகச்

சீர்த்திருத்தத்துறை, நாள் 12–11–1992–இன்படி விதி முறைகளை தவறாமல் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. முறையான பதவி உயர்வு ஆணைகள், மறுபணியமர்வு ஆணைகள், பதவியிலிருந்து விடுவிப்பு, பதவி உயர்வில் பணியில் சேருதல் அல்லது பதவி உயர்வு உரிமைத் துறப்பு மற்றும் அதனை ஏற்றல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் <u>ஒரு மாதத்திற்குள் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.</u>

பதவி உயர்வில் பணியில் சேராமல் அல்லது பதவி உயர்வு உரிமை துறப்பு செய்யாமல் எந்த வரைதொழில் அலுவலரையும் தொடர்ந்து வரைதொழில் அலுவலராக பணிபுரிய அனுமதிக்க கூடாது என்றும் வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறான நிகழ்வுகளில் அவர்களின் பதவி உயர்வு இரத்து செய்யப்படுவதோடு அவ்வாறு அனுமதித்த அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>இணைப்பு :</u> பிற்சேர்க்கை.

ஒம்/– சா. மன்மதன்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (ம)
தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து.,

<u>பெறுநர்:</u>

1. பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள்.

   (அவர்கள் தற்சமயம் பணிபுரியும் தலைமைப் பொறியாளர்கள் மூலமாக)

2. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–600 005 அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. பிற்சேர்க்கையில் தங்கள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு உரிய பணியமர்வாணையினை வழங்கி தனியர்கள் பணியில் சேர்ந்த நாளினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல்: அனைத்து தலைமைப் பொறியாளர்கள், நீர்வளத்துறை.

நகல் : ஆட்சி அலுவலர், இவ்வலுவலகம்.

நகல் : கண்காணிப்பாளர், எஸ்–9 பிரிவு, இவ்வலுவலகம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/4/2025
கண்காணிப்பாளர்

01/04/2025

முதன்மை தலைமைப் பொறியாளர் (ம)
தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம்,
நீர்வளத்துறை,
சேப்பாக்கம், சென்னை–5.

செயல்முறை ஆணை எண் எஸ்.5(3)/20524/2025–3/ நாள் : 01–04–2025

2024 – 2025 ஆம் ஆண்டிற்கான முதுநிலை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வு பட்டியல்

பிற்சேர்க்கை

| வ. எண். | தேர்ந்த பெயர் பட்டியல் வ.எண் | வ.தொ.அ பதவியில் ஒ.மு.வ. எண். | பெயர் மற்றும் பிறந்த தேதி (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் அலுவலகம் / துறை | பதவி உயர்வில் பணியமர்வு செய்யும் அலுவலகம் / துறை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 1 | 904 | செ.அருண்பிரகாஷ் (24–06–1983) | பொதுப்பணித்துறை | பொதுப்பணித்துறை | |
| 2 | 2 | 1009 | எஸ். அழகேஸ்வரி (07–01–1976) | தலைமைப் பொறியாளர், நீவது., கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர். | தலைமைப் பொறியாளர், நீவது., கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர். | |
| 3 | 3 | 1010 | எ. ஹெப்சி கோமளா (15–07–1977) | பொதுப்பணித்துறை | பொதுப்பணித்துறை | |
| 4 | 4 | 1011 | க. சதீஸ்பாபு (13–05–1978) | தலைமைப் பொறியாளர், நீவது., கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர். | தலைமைப் பொறியாளர், நீவது., கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர். | |
| 5 | 5 | 1012 | து. சுரேந்திரன் (27–05–1965) | பாலாறு வடிநில வட்டம், நீவது., சென்னை. | வடிவமைப்பு வட்டம், நீவது., சேப்பாக்கம், சென்னை–5. | |

| வ. எண். | தேர்ந்த பெயர் பட்டியல் வ.எண் | வ.தொ.அ பதவியில் ஓ.மு.வ. எண். | பெயர் மற்றும் பிறந்த தேதி (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் அலுவலகம் / துறை | பதவி உயர்வில் பணியமர்வு செய்யும் அலுவலகம் / துறை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 6 | 6 | 1013 | டி. நாகலட்சுமி (29–07–1970) | கீழ்க்காவிரி வடிநில வட்டம், நீவது., தஞ்சாவூர். | கீழ்க்காவிரி வடிநில வட்டம், நீவது., தஞ்சாவூர். | |
| 7 | 7 | 1015 | ஈ. அலமேலு மங்கை (16–05–1975) | நடுக்காவிரி வடிநில வட்டம், நீவது., திருச்சி. | மருதையாறு வடிநில கோட்டம், நீ.வ.து., அரியலூர். | |
| 8 | 8 | 1016 | கே. ரமேஷ் (07–03–1971) | பொதுப்பணித்துறை | திட்ட செயலாக்க அலகு–3, நீவது., நாகப்பட்டினம். | |
| 9 | 9 | 1017 | பொ. மல்லிகா (15–04–1971) | பொதுப்பணித்துறை | பொதுப்பணித்துறை | |
| 10 | 10 | 1018 | எம். ரமலா (12–04–1972) | நிலநீர் கோட்டம், நீவது., காரைக்குடி. | முன்னாள் ஜமீன் கண்மாய்கள் தரப்படுத்தும் கோட்டம், நீவது., காரைக்குடி. | |
| 11 | 11 | 1020 | ஆ. சாந்தினி (02–07–1974) | பொதுப்பணித்துறை | பொதுப்பணித்துறை | |
| 12 | 12 | 1021 | மா. மேரி ஸ்டெல்லா (26–05–1975) | பொதுப்பணித்துறை | பொதுப்பணித்துறை | |
| 13 | 13 | 1022 | பி. ஆனந்தகுமார் (03–06–1975) | பொதுப்பணித்துறை | திட்ட உருவாக்கம் வட்டம், நீவது., திருச்சி. | |
| 14 | 14 | 1023 | எஸ். ஜெகன் (04–05–1976) | பொதுப்பணித்துறை | சிறப்பு திட்டக் கோட்டம், நீவது., பெருந்துறை. | |

| வ. எண். | தேர்ந்த பெயர் பட்டியல் வ.எண் | வ.தொ.அ பதவியில் ஓ.மு.வ. எண். | பெயர் மற்றும் பிறந்த தேதி (திருவாளர்கள்) | தற்போது பணிபுரியும் அலுவலகம் / துறை | பதவி உயர்வில் பணியமர்வு செய்யும் அலுவலகம் / துறை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 15 | 15 | 1025 | பி. அன்புமொழி (25–12–1977) | கீழ்க்காவிரி வடிநில வட்டம், நீவது., தஞ்சாவூர். | சுரங்கவியல் மற்றும் கண்காணிப்புக் கோட்டம், நீவது., திருச்சி. | |
| 16 | 16 | 1026 | பி. சுப்பிரமணியன் (06–09–1966) | நீரியல் கோட்டம், நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், நீவது, பூண்டி. | நீரியல் கோட்டம், நீரியல் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், நீவது, பூண்டி. | |
| 17 | 17 | 1028 | ஆர். சீனிவாசன் (18–07–1971) | தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம், தஞ்சாவூர்– (அயற்பணி) – (திருச்சி மண்டலம். நீ.வ.து.,) | தெற்கு வெள்ளாறு வடிநில கோட்டம், நீவது., புதுக்கோட்டை. | |
| 18 | 18 | 1029 | எஸ். உஷா (17–04–1977) | பொதுப்பணித்துறை | சிறப்பு திட்டக் கோட்டம், நீவது., புதுக்கோட்டை. | |
| 19 | 19 | 1030 | பி. ஸ்ரீவித்யா (31–07–1977) | ஆழியாறு வடிநில கோட்டம், நீவது., பொள்ளாச்சி. | கீழ் பெண்ணையாறு வடிநில கோட்டம், நீவது.,விழுப்புரம். | |
| 20 | 20 | 1031 | ஆர். எஸ்பிரைட் (30–06–1978) | தலைமைப் பொறியாளர், நீவது., மதுரை மண்டலம், மதுரை. | பெரியாறு பிரதான கால்வாய் கோட்டம், நீவது., மேலூர். | |
| 21 | 21 | 1032 | வீ. சுகசீலன் (24–04–1979) | தலைமைப் பொறியாளர், நீவது., திருச்சி மண்டலம், திருச்சி. | தலைமைப் பொறியாளர், நீவது., திருச்சி மண்டலம், திருச்சி. | |

ஒம்/– சா. மன்மதன்,
முதன்மை தலைமைப் பொறியாளர் (ம)
தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து.,

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/4/2025
கண்காணிப்பாளர்
01/04/2025